**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.24/2024 - PW-2**

| | |
|---|---|
| Name | திரு. முத்துலட்சுமி |
| Husband/Father Name | சம்பத் |
| Village /Area | கண்டிகை சயினபுரம் |
| Taluk | நெமிலி |
| Occupation | கூலி |
| Age | 56 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 02.07.2025.

**(எதிரிகள் 1 முதல் 4 வரை ஆஜர். எதிரி 5 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

26.02.2016 அன்று எனது மகன் தனசேகர் என்பவர் காஞ்சிபுரம் பெட்ரோல் பங்கில் வேலை செய்து விட்டு மதியம் 02.30 மணியளவில் வீட்டிற்கு வந்தார். மணி, அருண், ஆனந்த் ஆகியோர் எனது மகனை வயிற்றில் கத்தியால் குத்தி குடல் தொங்கிவிட்டது. மேற்படி மூன்று நபர்களும் எங்கள் தெருவை சேர்ந்தவர்கள். அசா.1 எனது கணவர் ஆவர். மேற்படி சம்பவத்தை மடக்க சென்ற போது என்னை முடியை பிடித்து யசோதா என்பவர் தாக்கினார். என்னுடன் எனது மைத்துனர் கிருஷ்ணன் மற்றும் அவரது மனைவி தேன்மொழி சென்று தடுத்தோம். எனது மைத்துனர் கிருஷ்ணனுக்கும், தேன்மொழிக்கும் மேற்படி எதிரிகளால் கத்தியால் குத்தப்பட்டு காயம் ஏற்பட்டது. பிறகு புன்னை மருத்துவமனைக்கு எனது மகன் தனசேகர், விஜீ மற்றும் எனது உறவினர்களுடன் அழைத்து சென்றோம். மேலும் காயம் பட்ட எனது மைத்துனர் மற்றும் மைத்துனர் மனைவி

ஆகியோரை அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். எனது மகன் தனசேகரை சென்னை மருத்துமனைக்கு அழைத்து சென்றோம் அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்து விட்டதாக சொன்னார்கள். எனது மைத்துனர் மைத்துனர் மனைவியை மேல் சிகிச்சைக்காக சென்னை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதித்தார்கள். இந்த சம்பவம் குறித்து எனது கணவர் கொடுத்த புகாரின் பேரில் மறுநாள் பிணக்கூறாய்வு செய்து என் மகனை எங்களிடம் கொடுத்தார்கள். எனது கணவர் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் என்னை விவாரணை செய்தார்கள். யாசோதாவின் கணவர் தான் மணி. யாசோதாவின் மகன் ஆனந்த் மற்றும் அருண் ஆவர்கள். அவர்கள் நீதிமன்றத்தில் இன்று ஆஜர் ஆகியுள்ளார்கள்.

மனுவின் பேரில் குறுக்கு விசாரணைக்காக நிறுத்திவைக்கப்படுகிறது.

**ஒம்./-திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**